யாழ் நகரில்
நினைவில் வைத்திருங்கள்
✯ அன்பான உபசரிப்பு
✯ குறைந்த விலை
✯ சுவை மிகுந்த உணவு வகைகள்
நாடுங்கள்:
R.S.R. Green Peking Palace
4th Cross Street,
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

இந் நெருக்கடியான நிலையிலும்

| | |
|---|---|
| Lunch packets | 12/50 |
| Hot-Dogs | 10/- |
| Ice Cream | 6/- |
| Chinese Roll | 3/50 |
| Chilled Beer | 34/- |

மேலதிகக் கட்டணங்கள் இல்லை.
R.S.R.
Green Peking palace
4th Cross Street,
JAFFNA.

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 7 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 20 (19-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி 72

## ★ கிளிநொச்சியிலிருந்து
# ஆனையிறவு வரை இராணுவம் ரோந்து

### பரந்தனில் முகாமிட்டபின் முதலாவது நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 19

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து ஆனையிறவு இராணுவ முகாமுக்கு நேற்று நூற்றுக்கணக்கான இராணுவச் சிப்பாய்கள் ரோந்து புரிந்த வண்ணம் வந்து சேர்ந்தனர்.

லொறிகளிலும், பயணிகள் வாகனங்களிலும் சிப்பாய்கள் இந்த ரோந்துப் பணியை மேற்கொண்டனர்.

பரந்தனில் சிப்பாய்கள் நிலைகொண்டதை அடுத்து சிப்பாய்கள் மேற்கொண்ட முதல் ரோந்து நடவடிக்கை இது ஆகும்.

ஐந்து லொறிகளிலும் பயணிகள் வாகனங்களிலும் சிப்பாய்கள் வந்தனர். இந்த வாகனங்களுக்கு முன்னால் கவச வாகனம் வந்துகொண்டிருந்தது.

சிப்பாய்கள் பலர் சாரமும் ஷேட்டும் அணிந்து காணப்பட்டனர்.

#### ஹெலி பாதுகாப்பு

இடைவிடையே ஹெலிக்கொப்டர் ஒன்று சிப்பாய்கள் வரும் வாகனங்களைச் சுற்றி வட்டமிட்டபடி பாதுகாப்பு வழங்கியது.

ஆனையிறவு இராணுவ முகாமில் சிப்பாய்கள் வந்திறங்கியதும் தாம் வந்த பயணிகள் வாகனங்கள் எதனையும் சோதனையிடாமல் அனுப்பிவைத்தனர்.

இந்த ரோந்து நடவடிக்கையின்போது எதுவித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. (இ-10)

### கொடிதினம்

யாழ்ப்பாணம், பெப் 19

இன்று வியாழன் முதல் இம்மாதம் முடியும் வரை கொடிதினமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பான ''சுதந்திரப் பறவைகள்'' பிரகடனப் படுத்தியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கு முகமாக இந்த கொடிதினம் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது.

தகுந்த அத்தாட்சிகளுடன் வரும் சுதந்திரப் பறவைகளுக்கு உதவுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-10)

### விலை வீழ்ச்சி ஆனால் கட்டணம் இறங்கவில்லை

குடாநாட்டில் தற்பொழுது எரிபொருள் விலை ஓரளவு குறைந்துள்ள போதிலும் வாகனக் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை.

நேற்று டீசல் போத்தல் 40 ரூபாவாகவும், பெற்ரோல் போத்தல் 50 ரூபாவாகவும் விற்கப்பட்டது.

போதியளவு எரிபொருள் குடாநாட்டுக்குள் வந்து கொண்டிருப்பதாகவும் ஆனால் பெரும் பகுதி பதுக்கி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன. (இ-10)

### கைதாகும் இளைஞர் பரந்தனில் மண்மூடை அடுக்குகின்றனர்

யாழ்ப்பாணம், பெப் 19

சிப்பாய்களினால் கைதுசெய்யப்படும் இளைஞர்கள் மண்மூடை அடுக்கும் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பரந்தன் சந்தியில் உள்ள கடைகள் முன்பாக சிப்பாய்கள் மண்மூடைகளை அடுக்கி தம்மைப் பலப்படுத்தி வருகின்றனர்.

மண்மூடைகள் கட்டும் வேலைகளுக்கும், அடுக்கும் வேலைகளுக்குமே சிப்பாய்களினால் கைது செய்யப்படும் இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டுவருகின்றனர்.

மண் மூடைகள் கட்டும் வேலைகளுக்காக சிப்பாய்கள் டிராக்டரில் மண் கொண்டு வந்து வீதிகளில் குவித்துள்ளனர். (இ-10)

## விமான நிலையத்தில் உணர்ச்சிகர ஆர்ப்பாட்டம்
# ஈழத்தமிழரை நாடு கடத்தும் முடிவுக்கு தடை

### லண்டன் நீதிமன்றம் உத்தரவு

லண்டன், பெப். 18

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் நாடு கடத்தப் படுவதற்காக விமானத்தில் ஏற்றப்பட்ட 58 ஈழத் தமிழ் அகதிகளும் இறுதி நேரத்தில் லண்டன் மேல் நீதிமன்றம் ஒன்று விடுத்த இடைக்காலத்தடை உத்தரவை அடுத்து விமானத்தில் இருந்து இறக்கப்பட்டனர்.

மேற்படி அகதிகள் நாடுகடத்தப் படுவதை உடன் நிறுத்துமாறு மேல் நீதிமன்றம் தடை உத்தரவு விதித்திருந்தது.

இதே வேளை விமானத்தில் ஏற்றப்படுவதற்காக கொண்டு செல்லப்பட்ட ஈழத் தமிழ் அகதிகள் அங்கு உணர்ச்சிகரமான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

டாக்கா செல்லும் விமானத்தில் ஏற்றப்படுவதற்காக இலங்கைத் தமிழர்களைத் தடுப்பு முகாமில் இருந்து உள்துறை அமைச்சு அதிகாரிகள் கடந்த செவ்வாய் மாலை லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்துக்குக் கொண்டு வந்தனர்.

விமானத்தினுள் அதிகாரிகள் தமிழர்களை ஒவ்வொருவராக ஏற்ற முயற்சித்த சமயம் அவர்கள் அனைவரும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமில் சிப்பாய்கள் குவிப்பு

### பெரும் தாக்குதலுக்கு முஸ்தீபா?

யாழ்ப்பாணம், செப். 19

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியை மேலும் விஸ்தரிப்பதற்கு சிப்பாய்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

அதனைத் தொடர்ந்து இப் பகுதியில் இராணுவத்தினர் பெருந் தாக்குதல் ஒன்றை நடத்த முஸ்தீபு நடத்துகிறார்களா என்ற அச்சம் எழுப்பப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் முகாமில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

முகாமை அண்டியுள்ள பகுதிகளில் ஹெலிக்கொப்டர்களும் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றன.

பெருந்தொகையான பெட்டிகளில் சிப்பாய்களுக்கு தேவையான பொருள்களும் ஆனையிறவு முகாம் வந்து சேர்ந்துள்ளன என்று தெரியவருகிறது.

முகாமை அண்டியுள்ள கடல் ஏரிப் பிரதேசங்களிலும் ஹெலிக்கொப்டர் நடமாட்டம் அதிகரித்துள்ளது. (இ-10)


#### ஹெலிரோந்து

ஊர்காவற்றுறை, பெப் 19

செவ்வாய்க்கிழமை இரவு பத்து மணியளவில் காவலூர் கடற்பகுதியிலும் நாரந்தனை, சுருவில், சரம்பன், புளியங்கூடல் பகுதிகளிலும் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப்பறந்து வட்டமிட்டது.

சிறிது நேரம் வட்டமிட்ட ஹெலி பின்னர் மாதகல் கடலோரமாக பறந்து சென்றது. (உ-16)

மெச்சந்தி மூளி



எங்கடை ஆக்களோ ஏறின விலை குறைந்தாலும் தாங்களும் குறைப்பினம். அதுதானே எங்கடை அகராதியிலையே இல்லையே. சந்தர்ப்பம் பார்த்துக் கூட்டுவினமே தவிர ஒருபோதும் குறைக்கமாட்டினம்!

## குறிஞ்சாத்தீவில் ஹெலி தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 19

குறிஞ்சாத்தீவு பகுதியில் புலோப்பளை என்ற இடத்தில் நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

திடீரென மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் இப்பகுதி மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

பிற்பகல் நான்கு மணி அளவில் கடற்கரை வீதிப் பக்கமாக வந்த ஹெலிக்கொப்டர் தரையிறங்குவது போல் தாழப் பறந்தே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது.

எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (இ-10)

## பருத்தித்துறையில் ஷெல் தாக்குதல்

பெப்.19

நேற்று முன்தினம் இரவும் நேற்றுக்காலையிலும் பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இத்தாக்குதலினால் பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லையெனினும் பல தோட்டப்பயிர்கள் நாசமடைந்தன.

நேற்று முன்தினமிரவு வியாபாரிமூலையில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண் இருந்த பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் அம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள தோட்டப்பயிர்கள் நாசமுற்றன. அம்மன் ஆலயக்கட்டடத்திற்கும் சிறிது சேதம் ஏற்பட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவிலும் மீண்டும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் குண்டுகளும் தோட்டப்பகுதியில் விழுந்ததால் பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை.

50 கலிபர் துப்பாக்கிக் குண்டுகளும் தீர்க்கப்பட்டன.

இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஹெலிக்கொப்டர் ஒன்று இப்பகுதியில் தாழப்பறந்து வட்டமிட்டுச்சென்றது. (உ-160)

### யாழ். ஆஸ்பத்திரி முகடு மீதான
# செஞ்சிலுவை குறிகளை பெரிதாக இடுங்கள்

### உயர் அதிகாரிகள் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 19

''வானத்தில் இருந்து தெளிவாகப் பார்க்கக் கூடிய விதத்தில் யாழ் ஆஸ்பத்திரி கூரைமீது பெரிய அளவிலான செஞ்சிலுவைக் குறிகளை இடுக.''

யாழ். கோட்டை முகாம் உயர் அதிகாரிகளின் சிபார்சையடுத்து போதனா வைத்தியசாலை அமைச்சு உயரதிகாரிகள் யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இப்படிக் கேட்கப்பட்டிருக்கிறது.

தற்பொழுது ஆஸ்பத்திரிக் கூரைகளில் போடப்பட்டிருக்கும் செஞ்சிலுவைக் குறிகள் சிறியனவாக இருப்பதாகவும் விமானங்களில் இருந்து பார்க்கும்போது செஞ்சிலுவைக் குறிகள் தெளிவாகத் தெரிவதில்லை எனவும் அவர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இருபது அடி நீள, அகலத்தில் பெரிய குறிகளைப் போடுமாறும் கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கிறது.

இதனை அடுத்து பெரிய அளவிலான செஞ்சிலுவைக் குறிகளை இடும் வேலைகள் இன்று ஆரம்பிக்கப்படும் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (இ-10)

### நாடு கடத்தும் முடிவு:
# அசாதாரண நடைமுறை பின்பற்றப்பட்டது ஏன்?

### அகதிகள் அமைப்புப் பிரமுகர் கேள்வி

லண்டன், பெப் 18

ஈழத் தமிழ் அகதிகளை நாடுகடத்தும் முடிவை எடுப்பதில் அசாதாரண நடைமுறைகளை பிரிட்டிஷ் உள்துறை அதிகாரிகள் பின்பற்றியது ஏன்?

வெளிநாடுகளில் வசிக்கும் அகதிகள் சம்பந்தமாக ஆலோசனை கூறும் ஐரோப்பிய அமைப்புப் பிரமுகர் திரு. பிலிப் பிராஞ் இவ்வாறு பி. பி. சி. க்கு அளித்த பேட்டியில் கேள்வி எழுப்பினார்.

அவரது பேட்டியின் விவரம்:-

கேள்வி: 64 இலங்கைத் தமிழரும் உண்மையான அகதிகள் அல்லர் என்று பிரிட்டிஷ் அரசு கூறுகிறது. இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: அவர்கள் உண்மையான அகதிகளா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

உண்மையான பிரச்சினை என்ன வென்றால்

(4-ம் பக்கம் பார்க்க)

# நாடு கடத்தும் முடிவு நீதியானதாம்

### பிரிட்டிஷ் அமைச்சர் கூறுகிறார்

லண்டன் பெப். 18

ஈழத்தமிழ் அகதிகளை நாடு கடத்தும் முடிவு நீதியானதே என பிரிட்டிஷ் உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு. டேவிட்வாடிங்டன்பி பி. சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: இலங்கைத் தமிழர் அகதிகளை நாடு கடத்தும் முடிவு நீதியானதா?

பதில்: முடிவு நீதியானதே.

1983இல் தஞ்சம் கோரும்விண்ணப்பங்களை பரிசீலனைக்காக பிரிட்டிஷ் குடியகல்வு ஆலோசனைச்சபைமுன்சமர்ப்பிக்கும்திட்டம்ஒன்றைநடைமுறைக்குக் கொண்டு வந்தோம். இச்சலுகையைத் திட்டமிட்டு துஷ்பிரயோகம் செய்ய இடமளிக்கக்கூடாது என்பதால் இவர்கள் விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுத்தோம்.

1983இல் இருந்ததிலும் பார்க்க மோசமான நிலையை சமாளிக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

கேள்வி: இத் தமிழர்கள் இலங்கையில்இருந்து வந்திருக்கிறார்கள். அங்கு சிவில் யுத்தம்நடக்கிறது. தமிழர் அங்கு வசிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது பட்டினி கிடக்க வேண்டிய நிலைக்கு தமிழர் தள்ளப்பட்டுள்ளனர்

பதில்: இந்தத் தமிழர் இலங்கையில் இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

19—02—1987

வியாழக்கிழமை

சுபநேரம்:
8-02 முதல் 9-32 வரை

ராகுகாலம்:
2-02 முதல் 3-32 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## மேன்முறையீடு செய்ய

### அவசர அவசரமாக முயற்சி

லண்டன், பெப். 18

ஈழத்தமிழ் அகதிகளை நாடு கடத்தும் முடிவுக்கு லண்டன் மேல் நீதிமன்றம் விடுத்திருக்கும் இடைக்காலத்தடை உத்தரவுக்கு எதிராக நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும்.

இதற்கான அவசர நடவடிக்கைகளை பிரிட்டன் உள்துறை அமைச்சு எடுத்து வருகிறது.

உள்துறை அமைச்சர் டேவிட் வாடிங்டன் இத்தகவலை பி பி சி. செய்தியாளரிடம் வெளியிட்டார்.

அரசியல் தஞ்சம் என்ற பெயரில் திட்டமிட்ட குடியேற்றம் பிரிட்டனில் நடைபெறுவதைத் தடுக்கும் முயற்சிகளுக்கு ஊறுக்காக இருக்கும் சட்டத் தடைகளை களைவதில் உள்துறை அதிகாரிகள் முனைப்பாக இருக்கின்றனர்.

-இப்படி உள்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

**காணவில்லை**

ஆறுமுகம் நடராசா உசன் மிருசுவில் இலக்கம் 600470364-V என்ற அடையாள அட்டை சாவகச்சேரி - மிருசுவில் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்கூறிய விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கிருஷ்ணமூர்த்தி (சின்னம்மா), உசன், மிருசுவில்.

க. நடராசா ஆகிய எனது மூக்குக்கண்ணாடி 14-2-87 அன்று நவீன சந்தைக்கருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) க. நடராசா, 59, அரசடி றோட், வண்ணார்பண்ணை.


# பெரும் சிரமங்கள் மத்தியில் பயிற்சி பெறும் ஆசிரியர்கள்

## பலாலியிலிருந்து கோப்பாய்க்கு இடம் மாறிய பின் அவலநிலை

யாழ்ப்பாணம், பெப். 19

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் தமது பயிற்சியைப் பெற வேண்டி உள்ளது என்று கூறப்படுகிறது.

பலாலியிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்றவருட ஆரம்பத்தில் இராணுவ முகாமாக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அக்கலாசாலை தற்காலிகமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது.

கோப்பாய் கலாசாலையில் இடமில்லாததால் கோப்பாய் மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

இங்கு பயிற்சி பெறும் ஆசிரியர்களில் அனேகமானோர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் இங்கே தங்கியிருக்க விடுதி வசதிகளும் இல்லை;

பலாலி கலாசாலையில் இருந்த நூலகப் புத்தகங்கள், பரிசோதனைக் கூடப் பொருள்கள் ஆகியவற்றை பல முயற்சிகளின் பின் அங்கிருந்து எடுக்க முடியாமல் போய் விட்டது.

இதனால் ஆசிரியர்கள் போதிய நூலக, பரிசோதனைக்கூட வசதிகள் இன்றி பயிற்சி நெறியை தொடர வேண்டி உள்ளதாம்.

உடற்கல்வி ஆசிரியர்களுக்கு போதிய விளையாட்டு மைதான வசதிகளும் கோப்பாயில் இல்லை.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலுள்ள நூலகம், பரிசோதனைக் கூடம், மைதானம், விடுதி, தளபாடங்கள் என்பவற்றை உபயோகிக்க அங்குள்ள உயர் அதிகாரிகள் அனுமதி அளிக்க மறுத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (இ-5)

### கடலில் நனைந்த அரச ஊழியர்

அனலைதீவு, பெப். 19

தீவுப்பகுதிக்கு கடமைக்குச் சென்ற சமயம் அராலித்துறையில் படகு கவிழ்ந்ததால் அரச ஊழியர் பலர் கடலில் நனைந்தனர்.

இதனால் அவர்கள் கடமைக்குச் செல்ல முடியாது வீடுதிரும்ப நேரிட்டது.

அதிகப்படியான பயணிகளை ஏற்றிச் செல்வதால் அடிக்கடி இப்படியான விபத்துக்கள் ஏற்படுகின்றனவாம். (இ ரி)

இன்றும் நாளையும்

## புங்குடுதீவில் குஷ்டரோக ஆய்வு

அனலைதீவு, பெப் 19

யாழ் பல்கலைக் கழகமும், சுகாதாரப் பகுதியும் இணைந்து குஷ்டரோக ஆய்வு ஒன்றை புங்குடுதீவு 10ம், 12ம் வட்டாரங்களில் இன்று 19 ஆம் திகதியும், நாளை 20 ஆம் திகதியும் காலை 8 மணி முதல் நடத்த வுள்ளன.

யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து டாக்டர் சிவராசா, டாக்டர் சிவயோகம் ஆகியோரும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி சந்தசாமி, யாழ் சுகாதாரப் போதனாசிரியர் திரு. வைத்தீஸ்வரன் மற்றும் புங்குடுதீவு வெளிக்கள சுகாதார ஊழியர்கள், தொண்டர்கள் ஆகியோரும் இணைந்து இந்த ஆய்வினை மேற்கொள்வர்.

குஷ்டரோகம் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அதனை மாற்றுவது இலகுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

## வாசிப்பதனால் ஒருவன் பூரண மனிதனாகிறான்

மானிப்பாய், பெப் 19

வாசிப்பதனால் ஒருவன் பூரண மனிதனாகின்றான்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை முகாமை, வேலை உதவிச் செயலாளர் திரு. சு. பரமநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உடுவில் உப அலுவலகத்தின் நூலகத்தில் நூலக சிறுவர் பிரிவை அவர் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்து உரை ஆற்றினார்.

உடுவில் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. கணேஸ்வரன் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை பிரதம கணக்காளர் திரு. க. ம. இராசேந்திரம் உரையாற்றுகையில், சிறுபிள்ளைகள் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றில் பழக்கப்படுவதற்கும், சமுதாயத்துடன் ஒன்றி வாழ்வதற்குமான சூழ்நிலைகளை நூலகங்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன, என்றார்.

நூலக ஆலோசகர் குழுவின் சார்பாக திரு. நடராஜா, இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. எஸ். சண்முகலிங்கம், உடுவில் உப நிலைய நூலகர் ஆகியோரும் உரையாற்றினர்.

... பிரதம விகிதர் திரு பதமநாதன் நன்றி கூறினார் (இ-90)

## 'மனித மாடு' வெளியீடு

யாழ்ப்பாணம், பெப் 19

திரு. அ. செ. முருகானந்தனின் 'மனித மாடு' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை இலக்கியக்குழு நடத்தும் இவ்விழா நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் அரச அதிபரும் யா மா. க பேரவைச் செயலாளருமான திரு வை. மு. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும். கலாநிதி சு வித்தியானந்தன், திரு தி. ச. வரதராசன் ஆகியோர் வாழ்த்துரைகளும், கலாநிதி அ சண்முகதாஸ் வெளியீட்டுரையும் நிகழ்த்துவார்கள்.

பேராசிரியர் ந. சிவஞானசுந்தரம், திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் ஆய்வுரைகள் வழங்குவார்கள்.

திரு. நா. பொன்னுத்துரை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. எஸ். கே. மனோகரபூபன், திரு அ. சோமசுந்தரம்பிள்ளை, திரு. து சீனிவாசகம், திரு. ஈ. சரவணபவன், திரு. ம. சிவராசா, திரு. பூ. ஸ்ரீதர்சிங் ஆகியோர் முதற்பிரதிகளை திரு டொமினிக் ஜீவாவிடம் பெற்றுக்கொள்வார்கள்.

திரு சி சரவணபவன் வரவேற்புரையும், யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை செயலரும் உதவி அரச அதிபருமான திரு. ச. பொ. பாலசிங்கம் நன்றியுரையும் நிகழ்த்துவார்கள்.

நூலாசிரியர் திரு. அ. செ. முருகானந்தன் பதிலுரை வழங்குவார். (இ-5)

### மக்கள் முகம்

**ஆலய பரிபாலன சபை**

சாவகச்சேரி, பெப். 19

சாவகச்சேரி பெரியமாவடி உழுந்தம்புலம் விநாயகர் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு சு. கதிர்காமநாதன், உபதலைவர்:- திரு மு மகாலிங்கம், செயலாளர்:- திரு எஸ். கே. தெய்வேந்திரம் உபசெயலாளர்:- திரு ச. சந்திரராசா, பொருளாளர்:- திரு. தா. விமலநாதன் தர்மகர்த்தா:- திரு. வே குமாரசாமி, கணக்காய்வாளர்:- திரு. ப தியாகராசபிள்ளை (இ-31)

## ஷெல் தாக்குதல்களால் சேதமடைந்த வீடுகள்

பலாலி, பெப். 19

திங்கட்கிழமை இரவு பலாலியில் இருந்து ஏவப்பட்டு ஒரே இடத்தில் விழுந்த ஷெல்களால் பாதிக்கப்பட்ட வீடுகளின் விபரம் வருமாறு:

1. பாலு மகேந்திரத்தின் வீடு. (வீடு பெரும் சேதமடைந்தது. 100 அடி நீள மதில் நிலத்தில் சரிந்துள்ளது)

2. இராமு சின்னத்துரையின் வீடு. (வீடு உடைந்ததுடன் சுவரைத் துளைத்து சன்னங்கள் வீட்டினுள் சென்றன)

3. ஆறுமுகம் நடேசுவின் வீடு (சுவரைத் துளைத்த ஷெல் துண்டுகள் வீட்டினுள் கிடந்த கட்டிலைத் தாக்கின)

4 திருமதி மாணிக்கம் கனகம் அவர்களது வீடு. (சுவர் உடைந்துள்ளது. இவரது வீட்டுக் கிணற்றில் இருந்த சப்பியின் தூணும், மரமும் முறிந்து கிணற்றுள் விழுந்துள்ளன.)

5. கிராம சேவையாளர் நாகர் கதிரேசுவின் வீடு. (வீட்டுக்கண்மையிலுள்ள தோட்டத்தில் விழுந்த ஷெல்லினால் வீட்டுக்கூரை பாதிப்படைந்தது)

6. நாகமுத்துவின் வளவில் உள்ள பேச்சியம்மன் கோயில்கட்டடம் பாதிப்படைந்துள்ளதுடன் மரங்கள் பல முறிந்துள்ளன.

7. திருமதி இராசையாவின் வீட்டுக் கூரைத் தகடுகள் நொருங்கியுள்ளன. (இ-119)

## "வஹியின் ஒளியில் அசலும் நகலும்"

யாழ்ப்பாணம், பெப். 19

"வஹியின் ஒளியில் அசலும் நகலும்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் காதி அபூபக்கர் வீதி கதீஜா மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம். மன்சூர் தலைமை வகிப்பார்.

யாழ் பல்கலைக்கழக அறபு இஸ்லாமிய நாகரிக விரிவுரையாளர் மௌலவி எம். ஐ அப்துல் ரஸ்ஸாக்கின் ஆக்கம் இது.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க வித்தியானந்தன், மாநகரசபை ஆணையாளர் திரு சி வி. கே சிவஞானம் ஆகியோர் வைபவத்தில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர். (இ)

## காசோலை கமிஷன் பற்றி முகாமையாளர்

அச்சுவேலி, பெப் 19

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒப்படைக்கப்பட்டு உடனடியாகப் பணம் பெறும் காசோலைகளுக்கு அறவிடப்படும் கமிஷன் பற்றி பொது முகாமையாளர் வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவித்துள்ளார்.

5 ஆயிரம் ரூபாவுக்கு குறைவான காசோலைகளுக்கு 25 ரூபாவும் அதற்கு மேல் ஒவ்வொரு 100 ரூபாவுக்கும் 50 சதமும் கமிஷன் அறவிடப்படும்.

இந்த நடைமுறை சங்கத்தின் பெயரில் எழுதப்படும் வங்கி உண்டியல்கள், வங்கிக்கட்டளைகள், தனியார் பெயரில் எழுதப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள், அரசாங்க கூட்டுத்தாபன வங்கி காசோலைகள் ஆகியவற்றுக்கும் கடைப்பிடிக்கப்படும். (இ-11)

## மீனவர் கஷ்டங்களை நிவாரண உதவிமூலம் நிவர்த்தி செய்துவிட முடியாது

காங்கேசன்துறை, பெப். 19

கடலை நம்பி வாழ்ந்த பல்லாயிரம் தொழிலாளர்கள் அரசின் கெடுபிடிகள், தடைகளால் இன்று பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இயற்கையின் பயங்கர ஆபத்துக்களை துச்சமென மதித்து போராடி தமது ஜீவனோபாயத்திற்காக உழைத்தவர்கள் அவர்கள். இன்றுள்ள நிலையில் அவர்கள் படும் கஷ்டங்களை நிவாரண உதவிகள் மூலம் ஈடு செய்ய முடியாது

பலாலி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் பொதுக்கூட்டம் பலாலி வடக்கு அ. த. க. பாடசாலையில் நடைபெற்றது.

அதற்கு தலைமை வகித்து உரையாற்றிய அமைப்பின் தலைவர் திரு. த. புஷ்பராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அப்பகுதி கடற்றொழிலாளர்கள் பங்குபற்றிய இக்கூட்டத்தில் மேற்படி அமைப்பின் புதிய உத்தியோகத்தர்களும் தெரிவாகினர். (இ-13)

### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப் 19

கைதடியில் நடைபெற்ற வெடிகுண்டு விபத்தின்போது பலியான பத்து விடுதலைப் புலிகளுக்கும் மகளிர் அமைப்பு தனது அஞ்சலியைத் தெரிவித்துள்ளது

'இறுதித் துடிப்பு அடங்கும் வரை எம் மண்ணின் விடிவுக்காய்' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது. (உ-10)

தமிழர் ஒன்றுபட்டுப் போராடுவதால்

## போராட்டத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை

கொழும்பு, பெப் 19

தமிழர் ஒன்றுபட்டு போராடுவதால் தான் கடந்த 9 ஆண்டுகளாக பதவியில் இருக்கும் இந்த அரசினால் அப்போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

பிரபல பௌத்த மத குரு வண. டஞ்ஞசீக மகாநாயக்கதேரர் கண்டியில் நடந்த சமய வைபவம் ஒன்றில் முன் கண்டவாறு கூறினார்

சிறுபான்மையினர் ஐக்கியமாகச் செயல்படுவதை சிங்கள இனம் ஒரு பாடமாகக் கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் சொன்னார். (உ-ஐ-எ)

பிரமுகர்களை அழைத்து

## சுன்னாகம் தபாலக குறைகள் பற்றி கலந்தாலோசனை

சுன்னாகம், பெப். 19

எனது பிரதேசத்துக்குட்பட்ட மக்களின் அன்றாட மணியோடர் பிரச்சினையை ஈடுசெய்வதற்கு தினமும் 35 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது. தினமும் சுமார் 5 ஆயிரம் தபால்கள் எமது தபால் கந்தோருக்கூடாக விநியோகிக்கப்படுகின்றன.

சுன்னாகம் பிரதம தபால் அதிபர் திரு இ திருநாவுக்கரசு இவ்வாறு கூறினார்.

சுன்னாகத்திலுள்ள பிரபல கல்விமான்கள்- சமூகத் தொண்டர்கள்- பிரமுகர்களைக் கொண்ட குழுவை தபாலகத்திற்கு அழைத்து மக்கள் குறைகளைப்பற்றி கலந்துரையாடுகையில் திரு. இ. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் தபால் கந்தோர் மின்சார இணைப்புக்களை சீர்செய்யவும் பராமரிக்கவும் ஏற்படும் செலவுகளுக்காக சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 3 ஆயிரம் ரூபாவை வழங்குவதென உறுதி கூறியது.

தபால் கந்தோரின் கூரையில் உள்ள திருத்த வேலைகளை சுன்னாகம் வர்த்தகர் சங்கம் செய்து கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்த்தை- வர்ணம் தீட்டும் திருத்த வேலைகளை திரு நாகம்ஸ் அரசரட்ணம் செய்துதருவதாக உறுதி அளித்தார்.

சுன்னாகம் பிரசைகள் குழுச்செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம், வைத்திய கலாநிதி திரு ஆ. நடராஜா, அதிபர் திரு. நவரட்ணம் ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு, அதிபர் திரு. சோதிப்பெருமாள் உட்படப் பலர் உரையாற்றியதுடன் இன்றைய தேவைகள் பற்றியும் பிரஸ்தாபித்தனர். (இ-எ)

முல்லைத்தீவு பஸ்களுக்கு வந்த கஷ்டகாலம்

## டிப்போவுக்குள் செல்லுமுன் 24 மணிநேரம் வெளியே

யாழ்ப்பாணம், பெப். 19

முல்லைத்தீவு பஸ் டிப்போவுக்குள் பஸ்கள் செல்வதற்கு முன் டிபோ வாசலில் 24 மணி நேரம் தரித்து நிற்க வேண்டும்.

இப்படி முல்லைத்தீவு டிப்போ வளவினுள் இருக்கும் பொலீஸார் உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த வாரம் முதல் இந்த உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவசர திருத்த வேலைகளுக்குக்கூட டிப்போவுக்குள் பஸ்களைக் கொண்டு போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்

டிப்போவுக்குள் நுழையும் பஸ்களில் வெடிகுண்டுகள் வைக்கப்படலாம் எனக் கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-10)

### சத்தியங்கள் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், பெப். 19

நெல்லை க பேரன் எழுதிய சத்தியங்கள் (பதினேழு சிறுகதைகள்) நூல் அறிமுகவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அஞ்சலகத்திணைக்கள யாழ் பிராந்திய கணக்காளர் திரு. சு. சிவபாலன் வரவேற்புரையும் திருமதி கோகிலா மகேந்திரன் அறிமுகவுரையும் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் ஆசியுரையும் நிகழ்த்துவர்.

ஆய்வுரைகளை கலாநிதிகள் சோ. கிருஷ்ணராசா, பார்வதி கந்தசாமி, நா. சுப்பிரமணியன் ஆகியோரும் கவிதை சோ பத்மநாதன், திரு சு. இராஜநாயகம் ஆகியோரும் நிகழ்த்துவர். (இ)

# மூன்று மொழிகளைப் போதிக்கும் திட்டம் சாத்தியமானதல்ல

கொழும்பு, பெப் 19

மூன்று மொழிகளை மாணவர்களுக்குப்போதிக்கவேண்டுமென்று சிலர் கூறுகின்றார்கள் அது சாத்தியமானதல்ல.

இப்படி நிதி அமைச்சர் றோனி டி மெல் கண்டி திரித்துவக் கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:

நான் கல்விமான் அல்லன்,

தமிழ். சிங்களம், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளையும் மாணவர் படிக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள்.

வறுமையான எமது நாட்டில் இது சாத்தியமானதொன்று என்பது எனக்குத் தெரியவில்லை.

தேசிய ஒற்றுமையைக் கருதிக்கூட இதைச் செயற்படுத்த முடியாது.

நமது நாடு சுவிஸ் அல்ல, ஜேர்மனி அல்ல, அமெரிக்காவும் அல்ல.

இரண்டு மொழிகளையே சரியாகப் போதிக்கக்கூடிய வாய்ப்பும் நிதி வசதியும் நம்மிடம் இல்லை

இந்தநிலையில் எப்படி மூன்று மொழிகளைப் போதிக்கும் திட்டம் ... துணிக்கு ஏற்ப நமது ஆடையை வெட்டவேண்...

## வாயால் சுடமுடியாது என்று நல்ல போர் வீரர்கள் கூறுவர்

### லலித்தின் திட்டம் குறித்து றெனி

டும். நடக்க முடியாத கனவுகளைக் காணக் கூடாது

வாயால் சுட முடியாது என்று நல்ல போர் வீரர்கள் கூறுவார்கள்

இரண்டு உலக யுத்தங்களிலும் எமது நாட்டில் சமாதானம் நிலவியது அந்தச் சமாதானம் இனப்பிரச்சினையால் நாசமடைந்து விட்டது.

சிவில் யுத்தம் எம் நாட்டுப் பொருளாதாரத்தை அழித்து வருகிறது

தமிழ்மக்களின் உண்மையான குறைகள் என்ன என்பதை சிங்கள மக்கள் இதயசுத்தியுடன் ஆராய்ந்து தீர்வுகாண முன்வர வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் தொழில் வாய்ப்புத் துறையில் புறக்கணிக்கப் பட்டுவிட்டனரா? அப்படி என்றால் அக்குறைபாட்டை நீக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சமாதானம் நிலைநாட்டப்படவேண்டும் அது இரண்டு தரப்பினருக்கும் கௌரவமான தீர்வாக இருக்கவேண்டும்.

ஒரு பக்கத்தினருக்குக் கௌரவமான தீர்வு ஆக அது இருக்கக்கூடாது.

அப்படியான தீர்வு எந்தப்பக்கத்துக்கும் சமாதானத்தைக் கொண்டு வராது

இப்படி அமைச்சர் றெனி டி மெல் தெரிவித்தார்.

பாடசாலைகளில் மும்மொழித்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியே வற்புறுத்தி வருகிறார்.

அமைச்சர் றெனி டி மெல்லின் பேச்சு அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கு பதிலளிக்குமாற்போல் அமைந்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)


**பிரயாண ஒழுங்குகள்**

சவூதி அரேபியா:- OPEN VISA

லிபியா:- எலெக்றிக் வெல்டிங், காஸ் வெல்டிங் அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டும்.

சிங்கப்பூர்:- கப்பலில் வேலை செய்வதற்கு விரும்புவோருக்கான பயண ஒழுங்குகள்

விபரங்களுக்கு கீழ்க் காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

**றை ஸ்ரார் றவல்ஸ்**

இல. 6, நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 23881

வடமராட்சியில் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் ஆரம்பமாகிவிட்டன!

GAQ. கல்வியாண்டு 87 | 88 WEEKEND CLASSES

இரண்டாவது கிழமையாக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகப் பதிவிற்குரிய முடிவுத் திகதி நெருங்கிக்கொண்டிருக்கிறது. உங்கள் விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்! GCE A/L மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

பொருளியல் - குமாரவேல், இந்து நாகரிகம் - அருள்நங்கை, தமிழ் - குழந்தை, ... வேல் சிவானந்தன், புவியியல் - குணராஜா, அரசியல் - குமார்.

மேலும் விபரங்களுக்கு! நிர்வாகி, **கெயின்ஸ் கல்வி நிலையம்**, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

மனித வாழ்வு தர்மநெறியில் அமைய வேண்டும். இல்லையேல் உலகில் வேதனையும் பயமும் குழப்பமும் நிலவும்.
— பகவான் சத்ய சாயிபாபா

உதயன்
உண்மை - நேர்மை - துணிவு

இல,15, உதயன் ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 19-02-1987 த.பெ.இல. 23

## சாடிக்கேற்ற மூடியும் மூடிக்கேற்ற சாடியும்!

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்த நாட்டு அரசுக்குத்தான் அக்கறை இல்லை என்று இதுவரை கருதப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்று கூறிக் காலத்தைக் கடத்தி, இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் சனத் தொகையைக் குறிப்பிடத்தக்க அளவு குறைத்து விடுவதும் —

அதன் பின்னர் தமிழ் மக்கள் மீது தனது அதிகாரத்தைச் செலுத்தி அற்ப சொற்ப சலுகைகளை வழங்குவதும் —

இலங்கை முழுவதையும் ஒரு தனிச் சிங்கள நாடாக்குவதுமே -- அரசாங்கத்தின் உள் நோக்கமும், முழு நோக்கமும் ஆகும்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்துக்கு இருந்திருப்பின், 1984 இல் நடந்த சர்வகட்சி மாநாட்டிலேயே நல்ல தீர்வைக் கண்டிருக்க முடியும்.

சமாதானத் தீர்வில் -- அரசியல் தீர்வில்- பேச்சுவார்த்தை மூலமான தீர்வில் -- தான் தனக்கு நம்பிக்கை இருப்பதாக இலங்கை அரசு நடித்ததே அன்றி, அதற்குத் தேவையான அத்திவாரத்தைக்கூட இதுவரை அமைத்தது இல்லை.

தமிழர் பிரச்சினையில் மத்தியஸ்தராக வந்த இந்தியாவுக்கு அதனை நியாயமாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கறையும் இருப்பதாக ஆரம்பத்தில் நம்பப்பட்டது.

ஆயிரம் ஆயிரமாகத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் பிரச்சினையை ஆற அமர அணுகிக் காலத்தைப் போக்க இலங்கைக்கு உதவியது இந்தியா. ஆமை வேகத்தில் அலுவல்கள் நடத்தப்பட்டன.

இலங்கை அரசு பெயருக்கு -- வெளி நடிப்புக்கு சமாதானப் பேச்சு என்று கூறியது போல--

இந்தியாவும் தனக்கு இவ்விடயத்தில் அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் விதத்தில், இருந்திருந்தாற்போல் இலங்கை அரசை சொல்அளவில் கண்டித்ததே அன்றிச் செயலில் எதுவும் செய்யவில்லை. பிரச்சினையை விரைவில் தீர்த்துவிட வேண்டும் என்று நெருக்குதல்தானும் கொடுக்கவில்லை.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் குறிப்பிட்டது போல, ஜே. ஆர். அரசு அக்கிரமமும் அநியாயமும், காட்டுமிராண்டித்தனமும் புரியும் தளமாக விளங்கும் தமிழர் பகுதிகளுக்கு இந்தியா தனது பிரதிநிதி எவரையும் உத்தியோகபூர்வமாக அனுப்பி வைத்ததில்லை.

அதனால் தமிழர்கள் நடத்தும் உயிர்ப் போராட்டத்தின் பரிமாணம், மனதில் உறைக்கும்படியாக இந்தியாவுக்குப் புரியவில்லை. தமிழ் மக்களின் ஆபத்தின் தன்மையை இந்தியா உணர்பூர்வமாக, பரிபூரணமாக உணரவில்லை.

அதன் காரணமாக —

இந்தியாவின் மத்தியஸ்தத்திலும், அது காட்டும் அக்கறையிலும் ஈழத்தமிழர்களுக்கு ஏற்கனவே சந்தேகம் பிறந்தது உண்டு. இப்பத்தியில் பல தடவைகள் அச்சந்தேகம் பிரதிபலிக்கப்பட்டதை வாசகர்கள் மறந்துவிட மாட்டார்கள்.

இப்போது இந்தியாவின் மிகப் பிரபல பத்திரிகையான 'இந்து' கடந்த வாரம் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் இந்தியாவின் உண்மை நிலையை அச்சொட்டாக எடுத்துக் காட்டுகின்றது. அது பெரும் அதிர்ச்சியைத் தருகிறது.

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைகள் இந்திய அரசினதும், பொதுமக்களினதும் மனங்களில் பழக்கப்பட்ட சம்பவங்களாகக் கருதப்படும் போக்கு உருவாகியுள்ளது. இது பெரும் கவலைக்குரிய விடயம்.-

அதனால் கடந்த மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் கூட இந்தியாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை -

இவ்வாறு 'இந்து' தனது ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்திருக்கிறது.

இனப்படுகொலை கேட்டு அதிர்ச்சி அடையாத இந்தியாவுக்கு எப்படித் தமிழ் மக்களின் கஷ்ட நஷ்டங்கள் விளங்க முடியும்? அவர்களது பிரச்சினைகளை எவ்வாறு உணர முடியும்? அந்த உணர்வு இல்லாதவரை தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை இந்தியா பெற்றுத்தரும் என்று எவ்வாறு நம்புவது? மத்தியஸ்தம் என்ற வேடம் இந்தியாவின் சொந்த நலனுக்காகத் தான் என்று கூறுவதில் என்ன தப்பு?

இலங்கை அரசின் உண்மை நிலை வெளிச்சமாகத் தெரிவது போல, இந்திய நிலையும் இப்போது தெரிந்து விட்டது. இலங்கையும் இந்தியாவும் சாடிக்கேற்ற மூடியாகவும் மூடிக்கேற்ற சாடியாகவும் விளங்குகின்றன.

இனியும் இந்தியாவின் ஆதரவை அல்லது உதவியை ஈழத்துத் தமிழர் எப்படி எதிர்பார்ப்பது? நம்பியவனை நட்டாற்றில் விடும் ஒருவனை, ஆபத்பாந்தவனாகக் கற்பனை செய்வது வெறும் மூடத்தனம்!

இதனை நன்குணர்ந்து ஈழத் தமிழர்கள் தங்கள் சுதந்திரப் போராட்டத்தை வேறு புதிய அணுகுமுறையுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது.

இப்போது தான் சரியான ராஜதந்திரமும் விவேகமான செயற்பாடும் எப்போதையும் விடத் தேவைப்படுகிறது. அந்தத் தகுதிகள் தமிழ் மக்களுக்கு இல்லையா, உண்டா என்பதைத் தெரிந்து கொள்ளும் காலமும் வந்துவிட்டது.

### நாஸி கைதிகள் இன்னும் உண்டு

வாஷிங்டன், பெப். 18

நாஸி யுத்தக் கைதிகளில் 74 பேர் அமெரிக்காவில் இன்னும் வாழ்ந்து வருவதாக நீதி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சிடம் 74 பேரின் பெயர் மற்றும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையில் அமைச்சு அதிகாரிகள் 600 வரையிலான நாஸி யுத்தக் கைதிகள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-எ)

### பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

இஸ்லாமாபாத், பெப். 18

அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதனால் ஏற்படப்போகும் பிரதிபலன்களைக் குறித்து பாகிஸ்தானை அமெரிக்கா எச்சரித்து உள்ளது.

பாகிஸ்தானின் அமெரிக்கத் தூதர் டீன்ஹென்ஸன் இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் முன்கண்ட எச்சரிக்கையை விடுத்தார். (ஒ-எ)

# பஞ்சாப் பிரச்சினை தீர்வுக்குத் திட்டம்

## இவ்வாரம் அறிவிக்கப்படும் என்கிறார் பூட்டாசிங்

சண்டிகார், பெப். 18

பஞ்சாப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான செயற் திட்டம் இவ்வாரம் அறிவிக்கப்படும்.

இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளைக் கலந்து ஆலோசித்து இந்தத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதம், வெறிஉணர்வு, மதவெறி ஆகியவற்றை ஒன்றுபட்டு எதிர்ப்பதென திங்கட்கிழமை பிரதம மந்திரியுடன் எதிர்க்கட்சியினர் நடத்திய சந்திப்பில் முடிவு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ)

வெளி உலகில்

### அமெரிக்க நிபுணர்கள் மாஸ்கோ சென்றனர்

வாஷிங்டன், பெப் 18

நிலத்துக்கு அடியில் ரஷ்யா நடத்தும் அணு ஆயுத பரிசோதனைகளைக் கண்டுபிடிக்கும் சாதனங்களைப் பொருத்துவதற்காக ஆறு அமெரிக்க நிபுணர்கள் மாஸ்கோ சென்றிருக்கின்றனர்.

தேசிய வள பாதுகாப்புச்சபை இதனை வாஷிங்டனில் வெளியிட்டது.

இது போன்ற சாதனங்களை அமெரிக்காவில் பொருத்த ரஷ்ய நிபுணர்கள் இந்த வாரம் அமெரிக்கா செல்ல இருக்கின்றனர். (ஒ-எ)

### மரியாதைச் சந்திப்பு

சென்னை, பெப் 18

தென் பிராந்திய விமானப் படைத்தளபதி ஆர். எஸ். நாயுடு நேற்று தமிழக முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரனைச் சந்தித்தார்.

இது ஒரு மரியாதைச் சந்திப்பு என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## இரசாயன ஆயுதங்களை பகிரங்கமாக்க ரஷ்யா விருப்பம்

மாஸ்கோ, பெப். 18

ரஷ்யாவின் இரசாயன ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களைப் பகிரங்கப்படுத்துவதற்கு ரஷ்யா சம்மதம் தெரிவித்துள்ளது.

இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்வது தொடர்பாக பல நாடுகள் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் ஒரு புதிய திருப்பு முனையாக இது அமைந்துள்ளது.

இரசாயன ஆயுதங்களின் வெளிப்படையான தன்மையிருப்புக்களை சர்வதேச ரீதியில் நேரடியாக பரிசீலனை செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற நீண்டகால அமெரிக்க யோசனையை ரஷ்யா ஏற்றிருப்பதாக 40 நாடுகள் கலந்துகொள்ளும் ஆயுத பரிகரண மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### மிஸோராம் தேர்தல் முடிவுகள்

புதுடில்லி, பெப் 18

மிஸோராம் சட்டசபை தேர்தல்களில் மிஸோ தேசிய முன்னணி பெரும்பான்மை வெற்றி ஈட்டியுள்ளது.

இதுவரை வெளிவந்த முடிவுகளில் 20 இடங்களை மிஸோ தேசிய முன்னணி பெற்றது. 11 இடங்களை இந்திரா காங்கிரஸும் பெற்றுள்ளன.

ஏனைய தொகுதிகளும் மிஸோ தேசிய முன்னணி வசமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

### பொலீஸார் சுட்டு நால்வர் பலி!

பெங்களூர், பெப் 18

கர்நாடக மாநிலத்தில் பொலீஸ் நிலையத்தைத் தாக்க முயன்ற கும்பல் மீது பொலீஸார் சுட்டதில் நால்வர் உயிரிழந்தனர். நால்வர் காயம் அடைந்தனர்.

காவலில் வைக்கப்பட்டிருந்த பெண் ஒருத்தி மீது பொலீஸார் தவறு நடந்து கொண்டனர் என்ற செய்தி பரவியதைத் தொடர்ந்து கிராம மக்கள் பொலீஸ் நிலையத்தைத் தாக்க முற்பட்டனர். அப்போதே இச்சம்பவம் இடம் பெற்றது.

ஹஸாடா கிராமத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. (ஒ-எ)

# பிரிட்டிஷ் இராணுவம் பலவீனமான நிலையில்

## முன்னாள் இராணுவ அதிகாரியின் கருத்தால் அரசியல் நெருக்கடி

லண்டன், பெப் 18

பிரிட்டிஷ் இராணுவம் பலவீனமான நிலையில் உள்ளது என்று ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் பகிரங்கமாக கருத்து வெளியிட்டுள்ளது அரசியல் நெருக்கடி ஒன்றை பிரிட்டனில் உருவாக்கியுள்ளது.

1985ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் படைகளின் பிரதம தளபதியாக இருந்த ஜெனரல் சேர் பிராங் கிற்சன் தான் "பூரணமாக ஒரு யுத்தம்" என்ற தலைப்பில் வெளியிட்ட புத்தகம் ஒன்றில் முன்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

தேசிய பாதுகாப்புக்கு பலமுறை நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது இப்புத்தகம் என்று எதிர்க்கட்சிகளில் ஒன்றான தொழிற்கட்சி அபிப்பிராயம் தெரிவித்து உள்ளது.

பிரிட்டனில் 1லட்சத்து 62 ஆயிரம் துருப்புக்களைக் கொண்ட இராணுவத்திடம் போதிய பயிற்சி கிடையாது; நெருக்கடி நிலையைச் சமாளிக்க அதனால் முடியாது—

இப்படி அப் புத்தகத்தில் ஜெனரல் எழுதி இருக்கிறார்.

புத்தகத்தை வெளியிட முன்னர் புத்தகத்தை எழுதிய ஜெனரல் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து முன் அனுமதி பெறவில்லை. (ஒ-எ)

# போலந்துக்கு எதிரான தடைகளை அமெரிக்கா நீக்கியது

வாஷிங்டன், பெப். 18

போலந்துக்கு எதிரான தடைகளை நீக்க அமெரிக்க ஜனாதிபதி றேகன் முடிவு செய்துள்ளார்.

1981ம் ஆண்டு டிசம்பரில் போலந்தில் இராணுவ ஆட்சி விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கா இந்தத்தடைகளை விதித்திருந்தது.

அண்மைக் காலத்தில் அமெரிக்க - போலந்து உறவுகள் அபிவிருத்தியடைந்துள்ளன.

சென்ற வாரம் வார்ஸோவிற்கு அமெரிக்க அதிகாரிகள் சென்று போலந்து அதிகாரிகளுடன் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

போலந்தின் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிப்பதென அரசு அறிவித்ததை றேகன் வரவேற்றுள்ளார். (ஒ)

# ஆக்கிரமிப்பாளரையும் பாதிக்கப்படும் தமிழர்களையும் சமமாகப் பார்க்கும் தன்மை

## ராஜீவின் நிர்வாகம் குறித்து 'இந்து' நாளிதழ் தலையங்கம்

இலங்கை அரசின் வடபகுதி மீதான பொருளாதார முற்றுகை, அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவத் தாக்குதல், இவை தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாடு -- ஆகியன குறித்து "இந்து" ஆங்கில நாளிதழ் பெப்ரவரி 9 இதழில் பிரதான ஆசிரியர் தலையங்கம் ஒன்றை எழுதியது.

அத்தலையங்கத்தின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க மூன்று நிபந்தனைகளை இந்திய அரசு கொழும்பு அரசுமீது விதித்துள்ளது.

மனிதத்தன்மை, நீதி, நியாயமான அரசியல் என்ற அடிப்படையில் என்ன செய்யப்படவேண்டும் என்பதைக் காலம் பிந்தி அங்கீகரித்ததாக இந்திய அரசின் இந்த நடவடிக்கை அமைந்து உள்ளது.

கடந்த காலங்களில் இந்திய அரசு விட்ட பெரும் பிழைகளைத் தவிர்ப்பதில்தான் புதிய பேச்சுக்களின் வெற்றி தங்கியுள்ளது.

நெருக்கடியான சூழ்ப்பகரமான இந்த நிலையில் இலங்கைப் பிரச்சினையைக் கையாளும் இந்திய அதிகாரிகள் இதனை நினைவில்கொள்ள வேண்டும்.

இதுவரை விட்ட தவறுகள் இந்தியாவின் பலவீனத்தையே எடுத்துக் காட்டுகின்றன.

மோசம் அடைந்து வரும் இலங்கை அரசியல் நெருக்கடி காரணமாக எமது நாட்டின் சுமைகளைக் குறைக்க முடியாது உள்ளது.

### பிரபாவுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே பிரபாகரனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாத நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

இது இந்தியா தனது நம்பகத் தன்மைக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட ஊறு ஆகும்.

வடக்கு, கிழக்குமாகாணங்களில் தமிழர்களுக்கு எதிராக காட்டுமிராண்டித்தனமாக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைக்கடந்தசிலவாரங்களாக இந்திய அரசு கும்பிய நிலையில் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்திய அரசின் நடைமுறையில் காணப்படும் பலவீனம், இலங்கை அரசின் மனோ திடத்தைப் பெருக்கியுள்ளது.

அதன்காரணமாக இரண்டுகோண உத்தியைத் தற்போது இலங்கை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது.

### யுத்தத்தை விரும்பும் லலித்

தமிழருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் பின்னால் யுத்தத்தை விரும்பும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி இருக்கிறார்.

இலங்கை அரசின் இந்த இராணுவ நடவடிக்கை, பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இந்திய அரசின் பொறுப்பைத் [illegible] தமிழர் [illegible] 'இந்தத்தில்' மூழ்கடிக்கும் கொழும்பு அரசின் முயற்சி போக முடியாது.

தமிழ்ப் போராளிகளுடன் பேச்சுக்களை நடத்தக் கூடியதாக இராணுவ நடவடிக்கையின் தீவிரம் குறைவதையே இந்தியா பார்த்துக் கொண்டிருக்க முடியும்.

நடப்பதைப் பார்த்தால் கொழும்பு அரசின் பதில், நாட்டில் முக்கிய இனம் ஒன்றுக்கு எதிரான பொருளாதார முற்றுகையுடன் அப்பாவித் தமிழருக்கு எதிரான ஆயுதப் படையினரின் காட்டுமிராண்டித்தனமான இராணுவ நடவடிக்கை இணைந்துள்ளதாக அமைந்துள்ளது.

இருந்தும் சில இடங்களில் அப்பாவிச் சிங்களவர் மீதும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் இடம்பெறும் வன்செயல்கள் இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் பழக்கமானதொன்றாகிவிட்டது.


### மட்டக்களப்பு படு கொலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 200க்கு அதிகமான அப்பாவி மக்கள் கொலைப்பட்டமை குறித்து இந்திய அரசும், இந்தியப் பொதுமக்களும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அப்பாவித் தமிழ்மக்களைக் கொன்றவர்களில் வெளிநாட்டுக் கூலிப்படையினரும் இஸ்ரேலிய ஏஜண்டுகளும் இருந்தனர்.

அடக்குமுறைக்கு ஆளாகும் மக்களுக்கு பூரண ஆதரவு தெரிவிக்கக்கூடிய முறையில் ராஜீவின் கொள்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

[illegible] வழி [illegible] கூடியதான அங்கீகரிக்கக்கூடியதான அடிப்படைத் திட்டம்கூட



பொய்யாமொழி

குறள்:

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

பொருள்:

நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன் மக்களுக்குத் தலைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான்.

## செய்திக்கொத்து

### சாரணர் பரிசளிப்பு விழா

காங்கேசன்துறை, பெப். 19

பேடன் பவல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை தொகுதி சாரணர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு இம்மாதம் 28 ஆம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும் பேடன் பவல் விழாவில் பரிசு வழங்கப்படும்.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் இயக்கச் சங்கமும், யாழ் மாவட்ட சாரணிய மன்றமும் இணைந்து நடத்திய இப் போட்டிகளில் 40க்கு மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 600க்கு அதிகமான சாரணர்கள் பங்கு கொண்டனர். (இ-68)

### பணம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 19

அம்பாறை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தலைக்குக் கீழ் உள்ள இளைஞர் மன்றங்களின் செயல் திட்டங்களுக்கென ஒருலட்சம் ரூபாவை ஒதுக்கி உள்ளது.

இந்நிதிமூலம் இளைஞர் சுயதொழில் வேலை[illegible] நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (இ-5)

### தையல் மெசின்

யாழ்ப்பாணம், பெப். 19

மன்னார் வலப்பொத்தான் கிராம அபிவிருத்திச்சபை, பெண்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கென நிதி ஒதுக்கியுள்ளது.

இதன்படி 20 பெண்கள் தையல் மெசின்களைப் பெறவுள்ளனர்.

### தாமதமாகும் தபால் விநியோகம்

ஊர்காவற்றுறை பெப் 19

நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து தீவுப்பகுதிக்கு அனுப்பப்படும் தபால்கள் பல நாட்கள் கழித்தே குறித்த விலாசதாரரை சென்றடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-16)

### காரியாலயத்தின் மீதுவிழுந்தஷெல்

அனலை தீவு, பெப். 19

காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயத்தின் மேல் விழுந்து வெடித்தது.

இதனால் காரியாலயக் கூரை பலத்த சேதத்துக்குள்ளானது. (இ-5)

### 28 குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப் 19

மன்னார் மாவட்டத்திலுள்ள 28 கிராமிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

மன்னார்மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் இதற்கான வேலைகளைச் செய்திருந்தது (இ-5)

### மன்னாரில் 56 குடும்பங்களுக்கு தென்னம் செய்கைக் காணி

யாழ்ப்பாணம், பெப். 19

மன்னார் வீடமைப்பு அதிகார சபை மன்னாரில் உள்ள மாதிரிக் கிராமங்களில் உள்ள குடும்பங்களுக்கு தென்னம் செய்கைக்கான காணிகளை வழங்கவுள்ளது.

இக்காணிகளை பெறுவதற்கென 56 குடும்பங்கள் தெரிவு செய்யப்[illegible]

இதற்காக மன்னார் வீடமைப்பு அதிகார சபையைச் சேர்ந்த குழு ஒன்று காணிகளை பகிர்ந்தளிப்பதற்கான பூர்வாங்க வேலைகளை செய்து வருகின்றது.

இதன் மூலம் வீட்டு வசதிகளைப் பெற்றவர்கள் தொழில் வசதிகளையும் பெற [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bitsmans Institutes
MANIPAY
பிரிவு: 2
A/L 87 Aug. கலை, வர்த்தக, விஞ்ஞான
வினு - விடை
வகுப்புக்கள்
ஆரம்பம்: 21-02-87 Sat. 3.00p m.

உதயன்

19 - 02 - 1987 வியாழக்கிழமை

Bitsmans Institutes
MANIPAY
87 AUG ஒட்ட மின்னியல் (CURRENT ELECTRICITY)
ஆசிரியர்:
திரு செளந்தி
ஆரம்பம்: 21-02-87 சனி 6-30 a.m.

# போர் நிறுத்தம் ஏற்படுத்துவது குறித்து தீவிர ஆலோசனை

கொழும்பு, பெப். 19

இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக போர் நிறுத்தம் ஒன்றைச் செய்தால் என்ன என்பது குறித்து இலங்கை அரச உயர்வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக அறியப்படுகிறது. ஆனால் இது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இம்மாத ஆரம்பத்தில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தைத் தொடர்ந்து இலங்கை போர்நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வது குறித்து தீவிரமாகப் பரிசீலனை செய்கிறதாம்.

தமிழ்ப் போராளிகளும் போர் நிறுத்தத்துக்கு உடன்படும் பட்சத்திலேயே அதற்கு அரசு இணங்க வேண்டும் என்ற கருத்து அரச உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

போர் நிறுத்தம் சாத்தியப்படுமானால் இனப்பிரச்சினைப் பேச்சுகள் மீண்டும் புதுடில்லியில் நடக்கலாம் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே பிரதானமாக அழைக்கப்படுவர் எனவும் அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

போர் நிறுத்தம் சாத்தியமாகும் பட்சத்தில் யாழ். குடாநாடு மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளும் நீக்கப்படலாம் என்றும் அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றன. (அ)

## ஒலி, ஒளிபரப்புச்சேவை அனுமதிப்பத்திரம் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப் 19

சகல ஒலி, ஒளிச்சேவையாளருக்கும் தமிழீழ ஒலி, ஒளி சேவைக் கட்டுப்பாட்டுச் சபை அனுமதிப் பத்திரங்களை வழங்க உள்ளது.

சபையின் விதிமுறைகளுக்குட்பட்டு விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை விசாரணை செய்த பின்னரே அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப படிவங்களை பூர்த்திசெய்து எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்பாக யாழ்ப்பாணம் கச்சேரியடியில் இருக்கும் சபையின் அலுவலகத்திற்கு அவற்றை அனுப்பி வைக்கும்படி ஒலி, ஒளிச் சேவையாளர்கள் கோரப்பட்டு உள்ளனர்.

சனிக்கிழமைக்கு முன்னர் வரும் விண்ணப்பங்கள் மட்டுமே விசாரணைக்கு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை தமிழீழ ஒலி, ஒளி சேவைக் கட்டுப்பாட்டுச் சபையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைக்காட்சிசேவை, மினி சினிமா, வீடியோ சென்ரர், விளம்பர சேவை (ஒலி பெருக்கி), பொது இடங்களில் அமையப்பெறும் விளம்பர சேவை ஆகிய ஐந்து பிரிவினரும் அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

மக்கள் வங்கியின் பதில் கிடைத்தது

## அடகு வைத்தோரின் அடுத்த நடவடிக்கை சனிக்கிழமை தெரியும்

யாழ்ப்பாணம், பெப் 19

அடகு வைத்தோர் சங்கம் மக்கள் வங்கி நிர்வாகத்திடம் முன்வைத்த நான்கு அம்சக் கோரிக்கைகளுக்கும் பதில் கிடைத்துள்ளது.

ஆகவே, இதுதொடர்பாக சங்கத்தின் நிலைப்பாடு குறித்தும், மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதுவரை மறியல் போராட்டம் மக்கள் வங்கிமுன் தொடர்ந்து நடைபெறும் என அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

சனிக்கிழமை காலை 10 மணிக்கு வின்சர் திரையரங்கில் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும். (உ-10)

## ஆக்கிர....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவின் நிர்வாகத்தில் இல்லை.

அப்படி ஒன்று இருப்பின் அதை செயற்படுத்தக்கூடிய தந்திரோபாயமும் ராஜீவின் நிர்வாகத்தில் இல்லை.

பாதிக்கப்பட்டவர்களான இலங்கைத் தமிழரையும் அவர்களின் பிரதிநிதிகளையும், ஆக்கிரமிப்பாளர்களான இலங்கை அரசுடனும் அதன் படையெடுக்கும் ஆயுதப்படையினருடனும் சமப்படுத்திப் பார்க்கும் தன்மைதான் ராஜீவின் நிர்வாகத்தில் தெரிகிறது.

(தொடரும்)

## விளையாட்டரங்கு

ஷப்ரு ஆதரவு கூடைப்பந்தாட்டம்

### யாழ். கிறீன்பீல்ட் யாழ். பமிலியன்ஸ் சாம்பியன்களாகின

யாழ்ப்பாணம், பெப் 19

ஷப்ரு யுனிக்கோ நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் வை. எம். சி. ஏ. நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் யாழ் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் யாழ் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகமும் சாம்பியன்களாக வெற்றியீட்டின.

இறுதிப் போட்டிகள் கடந்த வார இறுதியில் சென் ஜோன்ஸ் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றன.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட விளையாட்டு அணிகளுக்கு பிரதம விருந்தினரான திரு. எஸ் பி அருமைநாயகம் ஷப்ருயுனிக்கோ நிதி நிறுவன பொது முகாமையாளர் திரு ரி. ஸ்ரீரங்கநாதனும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

ஆண்கள் பிரிவில் சென் ஜோன்ஸ் 'ஏ' அணிக்கும் கிறீன்பீல்ட் அணிக்கும் இடையே நடந்த இறுதி மோதல் சமபலத்துடன் இடம் பெற்றது.

இடைவேளையின் போது கிறீன்பீல்ட் அணி முன்னணியில் நின்றது. இடைவேளையின் பின்னர் இரண்டு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடின.

முடிவில் கிறீன்பீல்ட் அணி 48 – 45 புள்ளிகளால் சென் ஜோன்ஸ் அணியைத் தோற்கடித்து சாம்பியனானது.

பெண்கள் பிரிவில் யாழ் பமிலியன்ஸ் அணி யாழ். வளாகம் அணியைத் தோற்கடித்து சாம்பியனானது.

பரிசளிப்பு வைபவம் யாழ் வை எம். சி ஏ. தலைவர் திரு எம். சி பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது.

திருமதி புஷ்பா அருமைநாயகம் பரிசுகளையும் நற்சாட்சிப் பத்திரங்களையும் வழங்கினார். (இ-எ)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், பெப் 19

யாழ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் நாளை 20ஆம் திகதி நடைபெறவுள்ளன.

பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் இலங்கை வங்கியைச் சேர்ந்த திரு. வி. வி கே. பரமசாமி கலந்து கொள்வார்.

திருமதி இந்திராணி பரமசாமி பரிசில்கள் வழங்குவார்.

அருளம்பலம், பெரேரா கனகரத்தினம், சோமசுந்தரம் இல்லங்களுக்கிடையே மெய்வல்லுநர் போட்டி நடைபெறுகிறது. (இ-69)

### பாகிஸ்தான் வெற்றி!

கல்கத்தா, பெப். 18

இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான், இந்தியாவை இரண்டு விக்கெட்டுக்களினால் தோற்கடித்தது.

இந்திய அணி 40 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 238 ஓட்டங்களை எடுத்தது.

பாகிஸ்தான் அணி 39 3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 241 ஓட்டங்களை எடுத்தது.

வெற்றி தோல்வி யாருக்கு என்று தீர்மானிக்க முடியாத நிலையில் ஆரம்பம் முதல் போட்டி விறுவிறுப்பாக நடந்தது.

இந்திய அணியின் சார்பில் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் செஞ்சரி அடித்தது சிறப்பம்சமாகும்.

ஒரு நாள் போட்டித் தொடரில் பாகிஸ்தான் 2-0 புள்ளிகளால் முன்னணியில் உள்ளது. (இ-எ)

## உள்ளூர் பஸ் சேவை நேற்றும் இல்லை

யாழ்ப்பாணம், பெப் 19

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உள்ளூர் பஸ் சேவைகள் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெறவில்லை.

இன்றும் நடைபெற மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் தொடர்ந்தும் ஸ்தம்பித நிலைக்குள்ளாவதால் அரச ஊழியர்களும், பாடசாலை மாணவர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

பெப்ரவரி மாதத்திற்கான சீசன் டிக்கெட் எடுத்தவர்களும் இதனால் பெரும் சிரமம் அடைந்துள்ளனர்.

எனினும் வெளியூர் சேவைகள் ஓரளவு நடைபெற்று வருகின்றன (இ-10)

## இன்று நடப்பவை

### இராம கிருஷ்ண ஜெயந்தி விழா

கொக்குவில்,பெப் 19

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை இராம கிருஷ்ண ஜெயந்தி விழா கொண்டாடப்படுகிறது

வைத்திஸ்வரா வித்தியாலய இந்து மாணவர் மன்றம் நடத்தும் இவ்விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

பக்திப்பாடல்கள், பஜனை நடனம் முதலியனவும் மாணவர்களால் நிகழ்த்தப்படும். (இ-ரி)

### இசையரங்கு

யாழ்ப்பாணம் பெப் 19

செல்வி பராசக்தி சிவலிங்கம் அவர்களின் கர்நாடக இசையரங்கு நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை யாழ் பல்கலைக் கழகத்தில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கலந்து கொள்வார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பிரஸ்தாப இசை அரங்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது (உ-10)

## உரிய நேரம் வரும்போது தமிழர் பிரச்சினை பற்றி ராஜீவுடன்பேசுவாராம் கலைஞர் கருணாநிதி

சென்னை. பெப் 18

உரிய நேரம் வரும்போது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுவேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு கருணாநிதி முன் கண்டவாறு தெரிவித்தார்.

திருச்சியில் வைத்து திரு கருணாநிதி இத்தகவல்களை வெளியிட்டார்.

தூத்துக்குடித் துறைமுகத்தில் இருந்து கொழும்புக்கு பொருள்களை அனுப்புவதை எதிர்த்து திராவிடர் கழகமும் தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸும் கூட்டாக நடத்தப் போகும் மறியல் இயக்கத்தில் தி மு க பங்கு பற்றாது. ஆனால் தி.மு.க தனது தார்மீக ஆதரவை மறியல் போராட்டத்துக்கு வழங்கும்.

இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற நேருஜியின் உறுதிமொழி அரசியல் சாசனத்தில் சேர்க்கப்படும் வரை இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடரும்.

இப்படி கலைஞர் மு.கருணாநிதி தெரிவித்தார். (உ-எ)

## நாடு கடத்தும் - - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேராக லண்டன் வரவில்லை உண்மையில் இவர்கள் பங்களாதேஷில் இருந்து வந்தார்கள். அகதிகள் அல்லர் என்று காணப்பட்ட பின்னர் அவர்களை இங்கு வைத்திருப்பது சரியானதா?

கேள்வி: தங்களின் விண்ணப்பங்கள் சரியான முறையில் பரிசீலிக்கப்படவில்லை என்று அத்தமிழர்கள் கூறுகின்றனரே.

பதில்; அவர்கள் முறைப்பாடுகள் நன்கு விசாரிக்கப்பட்டன ஆராந்து பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே அவர்கள் தஞ்சம் கோரத் தகுதியற்றவர்கள் என்ற முடிவுக்கு நாம் வந்தோம்.

கேள்வி: இத்தமிழர்களின் முறைப்பாடுகளை ஏன் குடியகல்வு ஆலோசனைச் சபைக்கு அனுப்பவில்லை

பதில்; நாம் புதிய பிரச்சினை ஒன்றை எதிர்நோக்க வேண்டியுள்ளோம்.

ஆலோசனைச் சபைக்கு விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதானால் நீண்ட காலம் எடுக்கும். அதுவரை இவர்களைத் தடுப்பு முகாமில் வைத்து இருக்க வேண்டும்

அப்போது இவர்கள் நேர்மைபற்ற சிலரின் மோசடிக்குள் மாட்டிக் கொண்டுவிடுவார்கள்

மற்றது, இவர்கள் எங்கிருந்து புறப்பட்டு வந்தார்களோ அந்த நாட்டுக்கு நாம் இவர்களை நாடுகடத்த முடியாது. காலம் கடந்து போய் விட்டது என்று கூறி அந்த நாடு இவர்களை ஏற்றுக்கொள்ளாது.

கேள்வி: இவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பினால் அங்கு சித்திரவதை, கொலைக்கு முறைக்கு ஆளாகமாட்டார்களா?

பதில்: ஐ நா. அகதிகள் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்கவே இவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்தோம், அதன்படி இவர்கள் அகதிகள் அல்லர் என்று கண்டோம்.

இந்த இடத்தில் நான் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழர்கள் விஷயத்தில் பிரிட்டன் தாராளக் கொள்கையைத்தான் கடைப்பிடித்து வருகிறது

1985 இல் தமிழர்களுக்கு என்று விஸா முறை ஒன்றை நாம் கொண்டு வந்தோம்.

பிரிட்டனுடன் தொடர்புடைய இலங்கைத்தமிழர் எவரும் இலங்கையில் இன்னல்களுக்காளானால் அவர்கள் அந்த நாட்டில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு விசா பெற்று லண்டன் வரலாம்.

பின்னர் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பிக்கலாம்.

இச்சலுகையைப் பாவித்து நிறையத் தமிழர்கள் இலங்கையிலிருந்து லண்டன் வந்தனர்.

கேள்வி: நிறைய இலங்கைத் தமிழர் லண்டன் வந்தனர் என்று கூறினீர்கள் எண்ணிக்கையைக் கூறமுடியுமா?

பதில்: ஆயிரம் வரையிலான தமிழர் விஸா பெற்று வந்தனர்.

கேள்வி: இலங்கைத் தமிழரை முதன்முதலாக நாடு கடத்தும் ஐரோப்பிய நாடு பிரிட்டன் தான் என்று நான் அறிகிறேன்.

பதில்: இதை நான் முழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது. டென்மார்க், சுவீடன், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளும் இலங்கைத் தமிழரை அனுமதிப்பது இல்லை.

இலங்கையில் இருந்து இவர்கள் புறப்பட முதலில் எந்த நாட்டில் இறங்குகிறார்களோ அந்த நாட்டில்தான் அவர்கள் தஞ்சம் கோரவேண்டும், (உ-எ)

## ஈழத் தமிழரை- - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்கள் தங்கள் சட்டையைப் பிய்த்து எறிந்தனர். சிலர் காற்சட்டைகளைக் கழற்றி எறிந்தனர்

பெண்களும் குழந்தைகளும் கண்ணீர் மல்க நாடு கடத்த வேண்டாம் என்று பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

இலங்கையில் நடைபெறும் சிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்துள்ளோம் என்று கெஞ்சி மன்றாடினர்.

விமான நிலையத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட இந்த 58 பேரும் விமானத்தினுள் ஏற்றப்பட்டனர் ஆனால் விமானத்தின் இருக்கையில் அமர அவர்கள் மறுத்தனர். அங்கும் சுமார் 45 நிமிட நேரம் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது.

இப்படி உணர்ச்சிகரமான போராட்டம் ஒன்று லண்டன் ஹீத்ரோ விமான நிலைய விமானத்தில் நடைபெற்றுக்கொண்டு இருந்த சமயம் லண்டன் மேல் நீதிமன்றம் ஒன்றில் நீதிபதி வழங்கிய உத்தரவு விமான நிலையத்தில் நின்ற உள்துறை அமைச்சு அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமைவரை 58 தமிழரையும் நாடு கடத்தக் கூடாது என்று அந்த உத்தரவில் கூறப்பட்டு இருந்தது

பிரிட்டன் குடியகல்வு ஆலோசனைச் சபை செய்துகொண்ட முறைப்பாட்டின் மீது இந்த உத்தரவை லண்டன் நீதிபதி ஒருவர் வழங்கினார்.

### தடுப்பு முகாமில்

உடனே விமானத்தில் இருந்த 58 இலங்கைத் தமிழரையும் உள்துறை அமைச்சு அதிகாரிகள், விமானத்தில் இருந்து இறக்கி விமான நிலையத்துக்கு அருகில் உள்ள தடுப்பு முகாமுக்கு கொண்டு சென்றனர்.

25 பெண்கள், 9 குழந்தைகள், 30 ஆண்கள் அடங்கிய இந்த இலங்கைத் தமிழர் குழு இத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பர் என்று பிரிட்டன் உள்துறை அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

(மேற்படி 58 ஈழத் தமிழ் அகதிகளுடன் மேலும் 6 தமிழ் அகதிகளும் [illegible] பட்டிருக்கின்றனர். [illegible] தினத்தில் நாடுகடத்துறதாக முடிவு செய்யப்பட்டிருந்தது).

இதனிடையில் 64 இலங்கைத் தமிழரின் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அதிகாரிகள் அவசரமாக மீள் பரிசீலனை செய்யத் தொடங்கி இருக்கின்றனர்.

அரசியல் தஞ்சம் கோருவதற்குத் தேவையான தஸ்தாவேஜுகளைக் கொண்டு வராத காரணத்தினால்தான் இவர்களை நாடு கடத்த பிரிட்டன் முன்னர் தீர்மானித்து இருந்தது.

டாக்காவில்] இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இவர்கள் லண்டன் சென்று அரசியல் தஞ்சம் கோரியிருந்தனர். (உ-எ)

### தராசுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம் பெப் 19

தராசு படிகளுக்கு முத்திரையிடல் சாவகச்சேரி உப அபிவிருத்திச்சபை [illegible] (19-2-87) முதல் அடுத்த [illegible] திகதி வரை இடம் பெறும். (உ-எ)

## அசாதாரண நடை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அகதிகளா என்பதைக் கண்டுபிடிக்க கடைப்பிடித்த முறை சரிதானா என்பதுதான்.

அரசியல் தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யக் கடைப்பிடிக்கும்முறை இவர்கள் விஷயத்தில் செயல்படுத்தப்படவில்லை.

கேள்வி: எப்படியான நடைமுறை......?

பதில்: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முறைப்படி விசாரிக்கப்பட்டு இருக்கவேண்டும் சுதந்திரமான முறையில் அந்த விசாரணை அமைய வேண்டும். அப்படி இங்கு இடம்பெறவில்லை

டாக்காவில் இருந்து வெள்ளிக்கிழமை இவர்கள் லண்டன் வந்து இறங்கினர்கள்

உள்துறை அமைச்சு அதிகாரிகள் அவசரம் அவசரமாக சனி ஞாயிற்றுக்கிழமைகளில் விசாரணை நடத்தினர்கள்

நாடு கடத்தும் முடிவு திங்கள் காலை அறிவிக்கப்பட்டது திங்கள் மாலை விமானத்தில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட இருந்தனர்.

அத்தமிழர்கள் அகதிகளோ, இல்லையோ என இந்த அவசரம்? வார விடுமுறையில்கூட விசாரணை நடத்தப்பட்டதன் அவசியம் என்ன? இது வழமைக்கு மாறானது இல்லையா?

கேள்வி: என்ன காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: என்னால் சொல்ல முடியாது நாடு கடத்தும் உத்தரவை சில தினங்கள் நிறுத்தும் படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த விஷயத்தில் அதிகாரிகள் சரியான முறையில் வழி நடத்தப்படவில்லை

64 தமிழர்களுக்கு நல்ல பாடம் படிப்பிப்பதன் மூலம் இவர்களைப் பின்பற்றி அதிக இலங்கைத் தமிழர் வருவதைத் தடுக்கலாம் என்று உள்துறை அமைச்சு எண்ணி இருக்கலாம்.

பிரிட்டிஷ் அரசின் இந்த அவசர நடவடிக்கையின் பின்னால் உள்ள காரணங்கள் நீதிமன்ற விசாரணையின் போது வெளிவரலாம்.

கேள்வி: வேறு ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு தமிழ் அகதிகளை நாடுகடத்தியுள்ளனவா?

பதில்: ஒரு ஐரோப்பிய நாடும் நேராக இலங்கைக்கு தமிழரை நாடு கடத்தவில்லை.

மூன்றாவது நாடு ஒன்றுக்கு தமிழ் அகதிகளை நாடு கடத்தும் போது அந்த நாடு அவர்களுக்கு பாதுகாப்பானதா என்பது அறியப்பட வேண்டும்.

டாக்காவில் சில மணித்தியாலங்கள் தரித்து நின்றதற்காக இத்தமிழரை அங்கு அனுப்பு வேன் என்று கூறுவது முட்டாள்தனம்.

இது இத்தஅகதிகளை இலங்கைக்கு மறைமுகமாக நாடு கடத்தும் திட்டமே (உ-எ)

## நீத்தார் பட்டியல்

### பரமசாமிக்குருக்கள் - முத்துமோகனக்குருக்கள்

புத்தூர், நவக்கிரி விஞயகர் ஆலய பிரதம குரு பரமசாமிக்குருக்கள் முத்துமோகனக்குருக்கள் காலமாகிவிட்டார். இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கௌரி, பிரசன்னா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமசாமிக்குருக்கள், திருமதி ஞானதம்மா ஆகியோரின் அன்பு மகனும், விஜயபாஸ்கர், பாலச்சந்திரசர்மா, ஜகதீசன், குமாரலட்சுமி, மீனும்பிகை, கோகுலராணி, சரோஜினி ஆகியோரின் சகோதரருமாவார். 18 – 02 – 87 புதன்கிழமை ஈமக்கிரியைகள் புத்தூர் நவக்கிரியில் நடைபெற்றது.

தகவல்: விஜயபாஸ்கர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 19 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15,Second Lane, Power House Road, JAFFNA

Registered as a News - paper at the General Post Office. Under Number QJ / 94 / N/ 87 Telephone, 24805, 23078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org